2002 ஏப்ரல் 16]

5. உரிமைப் பிரச்சினை

மாண்புமிகு முதலமைச்சர் மீது—தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15-3-2002 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிறுவனங்களில் நிதி இழப்பு குறித்து பேசும்பொழுது குறிப்பிட்ட சில புள்ளி விவரங்கள் தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்து அளிக்கப்பட்ட வெள்ளை அறிக்கையில் குறிப்பிட்ட விவரங்களுக்கு முரண்பாடாக இருப்பதாக தெரிவித்து, திருவாளர்கள் க. பொன்முடி, இ. புகழேந்தி, பரிதி இளம்வழுதி மற்றும் கு. பிச்சாண்டி ஆகியோர் 10-4-2002 ஆம் நாளிட்ட கடிதத்தில் அவை உரிமை மீறல் பிரச்சினை அறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

பிற்பகல் 12-15

வழக்கமாக உறுப்பினர்கள் நிகழ்த்திய உரைகளில் சொல், இலக்கணம், புள்ளி விவரங்கள், மேற்கோள்கள் ஆகியவற்றில் பிழை இருந்தால் அவற்றைத் திருத்துவதற்காக அவ்வுரைகளின் நகல்கள் உரை நிகழ்த்திய உறுப்பினர்களுக்கு நிகழ்த்தியவாறே சட்டமன்றச் செயலகத்தில் உள்ள நிருபர்கள் பிரிவிலிருந்து அனுப்பப் பெறுகிறது. அவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்திற்கும் அவரது உரை அனுப்பப்பட்டு, ஏற்கெனவே நிருபர்கள் பிரிவில் பெறப்பட்டுள்ளது. சாதாரணமாக இத்திருத்தங்கள் என்னுடைய கவனத்திற்கு வராது. ஆனால், உறுப்பினர்கள் கொடுத்த உரிமை மீறல் அறிவிப்பினையொட்டி நானும் நிருபர்கள் பிரிவிலிருந்து இந்த நடவடிக்கைக் குறிப்பினை வாங்கிப் பார்வையிட்டேன்.

அவ்வாறு பார்வையிட்டபோது, 1996 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களின் accumulated loss திரண்ட இழப்பு ஏறத்தாழ 368.85 கோடி ரூபாய் என்ற புள்ளி விவரத்தினை 533 கோடி ரூபாய் எனவும், ஐந்து ஆண்டுகளும் சேர்த்து 1996 வரை ஏற்பட்ட இழப்பு ரூ.204.66 கோடி என்ற புள்ளி விவரத்தினை ரூ.368.81 கோடி என இரு இடங்களில் திருத்தம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் திருத்தப்பட்ட நகல்கள்தான் ஏற்கப்பட்ட சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளாக சட்டமன்றப் பேரவைச் செயலகத்தினால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது. நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள நகல்கள் திருத்தப்படாத நகல்களாகும்.

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 16

பேரவை விதி 220(1)-ன்படி உரிமை மீறல் உள்ளதாகக் கூறப்பெறும் செயல் மிகவும் அண்மையில் நடந்த நிகழ்ச்சியை குறித்ததாக இருக்கவேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் 10-4-2002 ஆம் தேதியில் கொடுத்த பிரச்சினை, சட்டமன்றப் பேரவையில் 15-3-2002 அன்று தெரிவித்த தகவலையொட்டியதாகும். இது மிகவும் காலம் கடந்த ஒன்றாகும்.

எனவே, அனைத்தையும் பரிசீலித்ததில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையில் வேண்டுமென்றே தவறான தகவல் தரவேண்டும் என்ற எண்ணமோ அல்லது எவ்வித உள்நோக்கமோ இல்லை எனக் கருதி, இதுகுறித்து எவ்வித உரிமை மீறல் பிரச்சினையும் இல்லை என என்னுடைய தீர்ப்பினைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

டாக்டர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு explanation.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொன்முடி, தங்களுக்கு விதிமுறைகள் தெரியும். சொல்லுங்கள்.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்கிற அதேவேளையிலே, இது புத்தகமாகவே வெளியிடப்பட்டிருக்கிறது. தமிழக அரசு வெளியிடுகிற புத்தகத்திலேயே இந்தக் குறை அப்படியே இருக்கிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு... (குறுக்கீடு) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: யாராக இருந்தாலும், நான்கூட தவறிச் சொல்லலாம். அமைச்சர்கள் சொல்லலாம். ஆனால், அந்த correction-ஐ நாங்களே பார்த்துக் கொடுத்துவிட்டோம் என்றால் சபைக்குத் தெரியாது. சபையிலே என்ன சொன்னாலும் தெரியும். இப்படிப்பட்ட நிலை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2002 ஏப்ரல் 16] [திரு. துரைமுருகன்]

வருகிறபோது, நேற்றைக்குச் சொன்ன ஒன்று தவறாகி விட்டது என்ற correction-ஐ சபையிலே சொல்லிவிட்டால் இந்தப் பிரச்சினை வராது. அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில்... (குறுக்கீடு) புத்தகத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. சட்டசபை நடவடிக்கைக் குறிப்புதான் சட்டசபையோடு சம்பந்தப்பட்டது.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இதற்கு மேலே பேச அனுமதிக்க முடியாது, விட்டுவிடுங்கள்.

டாக்டர் க. பொன்முடி: **

6. அறிவிப்பு

அரசினர் தனித் தீர்மானம் திருத்தப்பட்டவாறு அவைக் குறிப்பில் இடம் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில் பல முக்கியமான விவரங்கள் அடங்கி உள்ளதால், இன்று நிறைவேற்றப்பட்ட திருத்தப்பட்ட தீர்மானத்தின் முதல் பத்திக்குப் பிறகு ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானம் முழுவதையும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பேரவை ஏற்பளிப்புடன் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானம் முழுவதும் திருத்தப்பட்ட தீர்மானத்தின் முதல் பத்திக்குப் பிறகு அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை பேரவைக்கு அறிவிக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

5. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி

மாண்புமிகு முதலமைச்சர் மீது தீர்ப்பு—தொடர்ச்சி

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தீர்ப்பின் மேலே பேசுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை. (குறுக்கீடு) பொன்முடி, இந்தத் தீர்ப்பின் மேலே பேசுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை. அதற்குப் பிறகு நீங்கள் சொன்ன கருத்துகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன திரு. வினாயகமூர்த்தி.

திரு. எ.வ. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, **

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

டாக்டர் க. பொன்முடி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புத்தகம் என்பது தமிழக அரசு சார்பாக வெளியிட்ட புத்தகத்தைச் சொல்கிறார். அதற்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

டாக்டர் க. பொன்முடி: ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், என்னுடைய தீர்ப்பின் மீது இதற்குப் பிறகு விவாதம் நடைபெறுவதற்கு நான் அனுமதிப்பதற்கு இல்லை. சட்டமன்ற விதிகளுக்கு அது புறம்பானது.

டாக்டர் க. பொன்முடி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வினாயகமூர்த்தி, பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2002 ஏப்ரல் 16]

டாக்டர் க. பொன்முடி: **

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், என்னுடைய தீர்ப்பின் மேலே அதற்குப் பிறகு விவாதத்திற்கு அனுமதிப்பது என்பது விதிகளுக்குப் புறம்பானது, முரணானது. ஆகவே நான் வழங்கிய தீர்ப்பிலே முழுமையாக அந்த கருத்துகளை யெல்லாம் பரிசீலித்துதான் தீர்ப்பை வழங்கியிருக்கிறேன். அதற்கு மேலே விவாதத்தை அனுமதிப்பதற்கில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி. (குறுக்கீடு)

டாக்டர் க. பொன்முடி: **

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பிலே நான் தலையிட விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்து என்னவென்றால், அது தவறு என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருத்தி அனுப்பியிருக்கிறார்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி விவாதிப்பதற்கு இடமில்லை.

திரு. துரைமுருகன்: அதில் பிரச்சினை இல்லை. ஆனால் அந்தத் தவறான புள்ளிவிவரமே தமிழக அரசினுடைய சார்பிலே போடப்பட்ட ஒரு புத்தகத்திலே வந்திருக்கிறதே, அதைப்பற்றி என்னவென்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத் தனியாக எழுதிக் கொடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.